**நவம்பர் – 24**

# TNPSC துளிகள்

- சென்னை செம்மஞ்சேரியில் ஓர் உலகளாவிய விளையாட்டு நகரத்தை நிறுவ தமிழ்நாடு அரசு 261 கோடி ரூபாயை ஒதுக்கியுள்ளது.
- புதிதாகத் தொடங்கியுள்ள தீவிரவாதிகளின் ஊடுருவலைக் குறிவைத்து, இந்திய இராணுவமும் ஜம்மு & காஷ்மீர் காவல்துறையும் இணைந்து கிஷ்த்வாரில் சத்ரு நடவடிக்கையைத் தொடங்கியுள்ளன.
- தகவல் தொடர்பு அமைச்சகத்தின் நவீனமயமாக்கல் திட்டத்தின் ஒரு பகுதியாக, இந்திய அஞ்சல் துறையானது தனது முதல் Gen Z தலைமுறை சார்ந்த கருத்துருவுடன் கூடிய தபால் அலுவலக வளாகத்தினை டெல்லியில் உள்ள இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்தில் துவக்கியுள்ளது.
- ஜெர்மனி அணியைத் தோற்கடித்து போர்ச்சுகலின் போர்டிமோவில் நடைபெற்ற உலகப் பறக்கும் வட்டு கூட்டமைப்பு ஏற்பாடு செய்த WFDF உலகக் கடற்கரை அல்டிமேட் சாம்பியன்ஷிப் போட்டியில் இந்திய அணி வெற்றி பெற்றது.
- கோடெக்ஸ் அலிமென்டேரியஸ் குழுவின் (CAC48) 48வது அமர்வில் கோடெக்ஸ் அலிமென்டேரியஸ் குழுவின் (CCEXEC) நிர்வாகக் குழுவிற்கு இந்தியா ஒருமனதாக மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டது.
- இந்தியாவும் நேபாளமும் இரயில் அடிப்படையிலான சரக்குப் போக்குவரத்தினை, குறிப்பாக ஜோக்பானி-பிரட்நகர் வழித்தடம் மூலம் தாராளமயமாக்கவும் விரிவு படுத்தவும் இந்தியா-நேபாளப் போக்குவரத்து ஒப்பந்தத்திற்கான நெறிமுறையைத் திருத்தும் பரிமாற்ற அறிக்கையில் கையெழுத்திட்டன.
- ஓமன் வானியல் மற்றும் விண்வெளி அமைப்பானது, SWAN வால் நட்சத்திரத்தினை (வால்மீன் C/2025 R2 SWAN) வெற்றிகரமாக கண்காணித்து புகைப்படம் எடுத்தது.
- அமெரிக்க மின்சார வாகன நிறுவனமான டெஸ்லா, அரியானாவின் குருகிராமில் அதன் முதல் முழு அளவிலான இந்திய உற்பத்தி மையத்தைத் திறக்க உள்ளது.
- தெற்கு இரயில்வே நிர்வாகமானது, தமிழ்நாடு மற்றும் கேரளா முழுவதும் நேர அட்டவணையிடப் பட்ட உள்-மண்டலத் தளவாடச் சேவையான 'Coast-to-Coast' பார்சல் சிப்பம் விநியோக விரைவு இரயிலை அறிமுகப்படுத்தியுள்ளது.
    - இந்த இரயில் என்பது வேகமான, நம்பகமான மற்றும் செலவு குறைந்த பார்சல் இயக்கத்தை வழங்குகிறது என்பதோடு இது இந்திய இரயில்வே நிர்வாகத்தில் மேற் கொள்ளப் படும் இத்தகைய முதல் வகையான சேவையாகும்.
- பெண் தொழில்முனைவோருக்கு வளங்கள், நிதி, வழிகாட்டுதல் மற்றும் வாய்ப்புகளை சமமாக அணுகுவதை ஊக்குவிப்பதற்காக நவம்பர் 19 ஆம் தேதியன்று உலகளவில் மகளிர் தொழில்முனைவோர் தினம் அனுசரிக்கப்படுகிறது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்


## இலக்கிய மாமணி விருதுகள் 2025

- தமிழ்நாடு முதலமைச்சர் மூன்று அறிஞர்களுக்கு இலக்கிய மாமணி விருதை வழங்கினார்.
- T.ஞானசுந்தரம் (பாரம்பரியத் தமிழ்), R. காமராசு (ஆராய்ச்சித் தமிழ்), மற்றும் K. சோமசுந்தரம் “கலாப்ரியா” (படைப்புத் தமிழ்) ஆகியோர் விருது பெற்றவர்கள் ஆவர்.

- ஒவ்வோர் அறிஞருக்கும் 5 லட்சம் ரூபாய், ஒரு தங்கப் பதக்கம் மற்றும் ஒரு பாராட்டுப் பத்திரம் வழங்கப்பட்டது.
- முன்னணி தமிழ் அறிஞர்களைக் கௌரவிப்பதற்காக தமிழ் வளர்ச்சித் துறையால் இலக்கிய மாமணி விருது 2021 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.




## நெல் கொள்முதல் விதிமுறைகள்




- நெல் கொள்முதல் செய்வதற்கான அனுமதிக்கப்பட்ட ஈரப்பதத்தை 17 சதவீதத்திலிருந்து 22% ஆக அதிகரிக்க வேண்டும் என்ற தமிழகத்தின் கோரிக்கையை மத்திய அரசு நிராகரித்தது.
- தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் கனமழை பாதித்ததையடுத்து இந்த கோரிக்கை விடுக்கப்பட்டது.
- அதிக ஈரப்பத வரம்பிற்கான தமிழக அரசின் இதே போன்ற முந்தைய கோரிக்கைகள் கடந்த காலங்களில் மத்திய அரசால் ஏற்றுக் கொள்ளப் பட்டன.
- இந்தக் கோரிக்கைக்கு முன்னதாக அக்டோபர் மாத இறுதியில் மத்திய அரசின் குழுக்கள் தமிழகத்திற்கு வருகை தந்து நெல் மாதிரிகளை சேகரித்தன.
- கனமழையால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்குவதற்காக இந்த முடிவை மறுபரிசீலனை செய்யுமாறு தமிழக அரசு கோரியது.

# தேசியச் செய்திகள்

## CAG தணிக்கைக்கான சிறப்பு மையம்




- இந்தியாவின் தலைமைத் தணிக்கையாளர் (CAG) அலுவலகமானது ஐதராபாத்தில் நிதி சார் தணிக்கைக்கான ஒரு சிறப்பு மையத்தை அமைக்க உள்ளது.
- இந்த மையமானது, நிதி தணிக்கையில் ஆராய்ச்சி, பயிற்சி மற்றும் தொழில்முறை மேம்பாட்டில் கவனம் செலுத்தும்.
- மேம்படுத்தப் பட்ட தொழில்நுட்பம், செயற்கை நுண்ணறிவு (AI) மற்றும் தரவு சார்ந்த அணுகுமுறைகளைப் பயன்படுத்தி பொது தணிக்கையை நவீனமயமாக்குவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த முன்னெடுப்பு என்பது அதன் செயல்முறைகளை தரப்படுத்தவும், தணிக்கைச் செயல்பாடுகளை ஒத்திசைக்கவும், தணிக்கை மற்றும் கணக்குத் துறைகளுக்கு இடையே ஒருங்கிணைப்பை மேம்படுத்தவும் உதவும்.

## ரஷ்யாவில் இரண்டு புதிய தூதரகங்கள்




- இந்திய அரசானது, ரஷ்யாவின் யெகாடெரின்பர்க் மற்றும் கசானில் இரண்டு புதிய

தூதரகங்களைத் துவக்கியுள்ளது.

- இது வர்த்தகம், சுற்றுலா, பொருளாதாரம், அறிவியல், தொழில்நுட்பம், கல்வி மற்றும் கலாச்சார உறவுகளை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- யெகாடெரின்பர்க் கனரக பொறியியல், இரத்தினக் கல் உருவாக்கம், பாதுகாப்புத் துறை சார் உற்பத்தி, உலோகம், அணு சக்தி சார் எரிபொருள், இரசாயனங்கள் மற்றும் மருத்துவ உபகரணங்களுக்கு பெயர் பெற்ற ஒரு தொழில்துறை மையமாகும்.
- கசான் எண்ணெய் உற்பத்தி, உரங்கள், வாகனப் பாகங்கள், பாதுகாப்புத் துறை சார் உற்பத்தி, மருந்துகள் மற்றும் மின்சார உபகரணங்களுக்குப் பெயர் பெற்றது.
- தூதரக அதிகார வரம்புகளின் கீழ் கசானில் சுமார் 7,000 இந்தியர்களும், யெகாடெரின்பர்க்கில் 3,000 இந்தியர்களும் வாழ்கின்றனர்.

## டிஜிட்டல் முறையில் அச்சிடப்பட்ட புதிய போர் கவச உடைக்கு அறிவுசார் சொத்துரிமை





- இந்திய இராணுவம் ஆனது டிஜிட்டல் முறையில் அச்சிடப்பட்ட புதிய போர் கவச உடையை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இந்த உடையானது, இராணுவ வடிவமைப்பு வாரியத்தின் ஆலோசனைத் திட்டத்தின் கீழ், புது டெல்லியில் உள்ள தேசிய ஆடை வடிவமைப்பு தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தினால் (NIFT) வடிவமைக்கப்பட்டது.
- இது சௌகரியம், எளிதான இயக்கம் மற்றும் செயல்பாட்டுத் திறனுக்காக மேம்பட்ட தொழில்நுட்ப ஜவுளி நுட்பங்களுடன் கூடிய மூன்று அடுக்கு வடிவமைப்பைக் கொண்டுள்ளது.
- இந்தக் கவச உடையில் டிஜிட்டல் முறையில் அச்சிடப்பட்ட நீடித்த வெளிப்புற கவச உடை, காப்பிடப்பட்ட உள் உறை மற்றும் ஈரப்பதம் மற்றும் வெப்பநிலைக் கட்டுப்பாட்டிற்கான வெப்ப கடத்துத் திறன் கொண்ட அடுக்கு ஆகியவை அடங்கும்.

- இராணுவம் ஆனது கொல்கத்தாவில் உள்ள காப்புரிமைகள், வடிவமைப்புகள் மற்றும் வர்த்தக முத்திரைகளின் தலைமைக் கட்டுப்பாட்டு (CGPDTM) அமைப்பிடம் இந்த வடிவமைப்பைப் பதிவு செய்தது.
- இந்தப் பதிவு, இந்தக் கவச உடையின் வடிவமைப்பு மற்றும் உருமறைப்பு முறை மீது இராணுவத்திற்குப் பிரத்தியேக அறிவுசார் சொத்துரிமைகளை (IPR) வழங்குகிறது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## சூரிய சுழற்சி குறித்த தகவல்கள்





- 100 ஆண்டுகளுக்கும் மேலாக, கொடைக்கானல் சூரிய ஆய்வகத்திலிருந்து (KoSO) பெறப் பட்ட படங்களைப் பயன்படுத்தி அறிவியல் ஆராய்ச்சியாளர்கள் சூரியனின் துருவ காந்தப் புலங்களை மறுகட்டமைத்தனர்.
- இந்த ஆய்வு ஆனது இந்தியா, அமெரிக்கா, ஜெர்மனி மற்றும் இத்தாலி ஆகிய நாடுகளின் கூட்டுப் பணியாளர்களுடன் ஆர்யபட்டா கண்காணிப்பு அறிவியல் ஆராய்ச்சி நிறுவனத்தினால் (ARIES) நடத்தப்பட்டது.
- 1904 ஆம் ஆண்டு முதல் Ca II K அலைநீளத்தில் மேற்கொள்ளப்படும் KoSO அவதானிப்புகள், பிரகாசமான (ஒளிர்) சூரிய கரும்புள்ளி மற்றும் வலையமைப்புகள் எனப்படும் பிரகாசமான பகுதிகள் உள்ளிட்ட ஒளிபுகு சூரியப் புற வளி மண்டலத்தின் / குரோமோஸ்பெரிக் செயல்பாட்டை கண்காணிக்கின்றன.
- AI/ML (செயற்கை நுண்ணறிவு / இயந்திரக் கற்றல்) வழிமுறைகள் கடந்த நூற்றாண்டில் துருவப் புல வலிமைக்கான பதிலீட்டுத் துருவ வலையமைப்பு அம்சங்களை அடையாளம் கண்டன.
- சூரியச் சுழற்சி 25 உள்ளிட்ட சூரிய செயல்பாடு மற்றும் செயற்கைக் கோள்கள், GPS மற்றும் மின் கட்டமைப்புகளைப் பாதிக்கும் சாத்தியமான சூரியப் புயல்களைக் கணிக்க இந்த மறுகட்டமைப்பு உதவுகிறது.

## BIRSA 101

- இந்தியா உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட தனது முதல் CRISPR அடிப்படையிலான மரபணு சிகிச்சைக்கு BIRSA 101 என பெயரிட்டுள்ளது.
- பகவான் பிர்சா முண்டாவின் 150வது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் அவரை கௌரவிக்கும் விதமாக இந்த சிகிச்சைக்கு இந்தப் பெயரளிக்கப்பட்டது.
- அரிவாள் வடிவ உயிரணு இரத்த சோகை நோய் முதன்மையாக மத்திய மற்றும் கிழக்கு இந்தியாவில் உள்ள பழங்குடியின மக்களைப் பாதிக்கிறது.
- அரிவாள் வடிவ உயிரணு இரத்த சோகை நோய் (SCD) என்பது ஒரு மரபணு இரத்தக் கோளாறு ஆகும்.
- இரத்த சிவப்பணுக்கள் பிறை வடிவமாகி, ஆக்ஸிஜன் போக்குவரத்து குறைதல், கடுமையான இரத்த சோகை, வலி மற்றும் உறுப்பு சேதத்தை ஏற்படுத்துகின்றன.




## CE20 பூட்-ஸ்ட்ராப் பயன்முறை




- CE20 கிரையோஜெனிக் எஞ்சினில் வெளிப்புற ஏவு உதவி எதுவும் இல்லாத பூட்-ஸ்ட்ராப் பயன்முறை ஏவுதலை இஸ்ரோ வெற்றிகரமாகப் பரிசோதித்தது.
- மகேந்திரகிரியில் உள்ள உயர் மட்டச் சோதனை (HAT) மையத்தில் வெற்றிடச் சூழல்களின் கீழ் இந்தப் பரிசோதனை நடத்தப்பட்டது.
- CE20 இயந்திரம் ஆனது மார்க்-3 (LVM3) என்ற ஏவு வாகனத்தின் மேல் நிலைக்கு ஆற்றல் அளிக்கிறது.
- வெளிப்புற ஏவு உதவி அமைப்புகள் எதையும் பயன்படுத்தாமல் இந்த இயந்திரம் நிலையானச் செயல்பாட்டை அடைந்தது.
- இந்தச் சோதனை எதிர்கால LVM3 ஏவுதலின் மறுதொடக்கச் செயல்திறன் மற்றும் செயல்பாட்டு நெகிழ்வுத்தன்மையை மேம்படுத்துகிறது.


# சுற்றுச்சூழல் செய்திகள்

## இந்தியாவில் பிறந்த முதல் சிவிங்கிப் புலிக் குட்டிகள்

- இந்தியாவில் பிறந்த முதல் இந்தியப் பெண் சிவிங்கிப் புலியான முகி, ஐந்து ஆரோக்கியமான குட்டிகளை ஈன்றெடுத்துள்ளது.
- இந்தியாவில், சிவிங்கிப் புலிகளின் முதல் வெற்றிகரமான பிறப்பு இதுவாகும்.
- 1952 ஆம் ஆண்டில் சிவிங்கிப் புலிகள் அழிந்து விட்டதுடன், ஆப்பிரிக்கச் சிவிங்கிப் புலிகளை இந்தியாவிற்குள் மீண்டும் அறிமுகப்படுத்துவதற்காக சிவிங்கிப் புலிகள்


வளங் காப்புத் திட்டம் தொடங்கப்பட்டது.

- முதலாவது மறு அறிமுகத் தளம் மத்தியப் பிரதேசத்தில் உள்ள குனோ தேசியப் பூங்கா ஆகும் என்பதோடு இது அதன் பொருத்தமான புல்வெளி-சவன்னா வாழ்விடம் மற்றும் அதிக இரை கொண்ட தளத்திற்காக தேர்ந்தெடுக்கப்பட்டது.
- "இந்தியாவில் சிவிங்கிப் புலிகளை மீண்டும் அறிமுகப்படுத்துவதற்கான செயல் திட்டத்தின்" கீழ், நமீபியா மற்றும் தென்னாப்பிரிக்காவிலிருந்து 50 சிவிங்கிப் புலிகள் ஐந்து ஆண்டுகளுக்குள் இந்தியா கொண்டு வரப் படும்.




## இந்தியாவில் கடற்பசுக்களுக்கு உள்ள அச்சுறுத்தல்கள்

- ஒரு புதிய IUCN அறிக்கையானது இந்தியாவில் டுகோங் (கடல் பசுக்கள்) அச்சுறுத்தல்கள் இருப்பதை எடுத்துக்கா ட்டுகிறது.
- இந்தியாவில் அவற்றின் முக்கிய வாழ்விடங்களில் கட்ச் வளைகுடா (குஜராத்), மன்னார்–பால்க் விரிகுடா (தமிழ்நாடு/இலங்கை) மற்றும் அந்தமான் & நிக்கோபார் தீவுகள் ஆகியவை அடங்கும்.
- டுகோங் என்பது டால்பின் போன்ற வால் கொண்ட மனாட்டிகளுடன் தொடர்புடைய கடல் வாழ் பாலூட்டிகள் ஆகும்.
- IUCN அமைப்பின் செந்நிறப் பட்டியலில் எளிதில் பாதிக்கப்படக் கூடியதாக பட்டியலிடப் பட்டுள்ள இது, 1972 ஆம் ஆண்டு வனவிலங்கு (பாதுகாப்பு) சட்டத்தின் (இந்தியா) கீழ் மிக உயர்ந்த சட்டப் பாதுகாப்பான அட்டவணை I அந்தஸ்தைப் பெற்று உள்ளது.
- டுகோங் தினமும் 30–40 கிலோகிராம் வரையிலான கடல் புற்களை உண்கின்றன என்பதால், கடல் புற்களின் ஆரோக்கியத்தைப் பேணி, கடல் சார் பல்லுயிரியலை ஆதரிக்கின்றன.
- அவற்றின் எண்ணிக்கை மதிப்பீடுகள் : மன்னார்–பால்க் விரிகுடாவில் 150–200, அந்தமான் & நிக்கோபார் தீவுகளில் <50, கட்ச் வளைகுடாவில் <20 ஆகும்.
- மீன்பிடித் தடை, வாழ்விட இழப்பு, கடலோர மாசுபாடு, அதிக கடல் கொந்தளிப்பு (நீர் குழம்புதல்) மற்றும் கன உலோகங்கள் (ஆர்சனிக், காட்மியம், குரோமியம், பாதரசம், ஈயம்) ஆகியவை இவற்றிற்கான அச்சுறுத்தல்களில் அடங்கும்.




## குஜராத்தில் உள்ள முக்கியப் பெரும் பூனை இனங்கள்




- குஜராத்தின் இரத்தன்மஹால் வனவிலங்கு சரணாலயத்தில் ஒரு காட்டுப் புலி தொடர்ந்து ஒன்பது மாதங்களாக நிரந்தரமாக குடியேறியுள்ளது.
- அங்கு ஆசிய சிங்கம், இந்தியச் சிறுத்தை மற்றும் புலி ஆகியவை ஒரே நிலப்பரப்பில் உள்ளதுடன் குஜராத் தற்போது மூன்று பெரும் பூனை இனங்களையும் கொண்டுள்ளது.
- மேலும் குஜராத் இப்போது இந்தியாவில் மூன்று பெரிய பூனைகள் ஒரே இயற்கை நிலப் பரப்பில் ஒன்றாக வாழும் ஒரே இடமாகவும் மாறியுள்ளது.

- இரத்தன்மஹால் வனவிலங்குச் சரணாலயம் ஆனது மத்திய குஜராத்தின் தஹோட் மாவட்டத்தில், குஜராத்-மத்தியப் பிரதேச எல்லையில் உள்ளது.
- 1982 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் அறிவிக்கப்பட்ட இந்தச் சரணாலயமானது, அதனைச் சுற்றி 41 கிராமங்கள் அதன் தொடர்பு மண்டலத்தில் உள்ளதுடன், 11 கிராமங்களில் 65 சதுர கி.மீ. காப்புக் காடுகளை உள்ளடக்கியுள்ளது.
- இது பல்வேறு வகைக் காடுகள், சோம்பல் கரடி எண்ணிக்கையின் அடர்த்தி மற்றும் சிறுத்தை, புனுகுப்பூனை, நான்கு கொம்புகள் கொண்ட மான், லங்கூர்கள் மற்றும் பலவற்றின் வாழ்விடங்களைக் கொண்டுள்ளது.
- பனம் நதியின் நீர்ப்பிடிப்புப் பகுதியைக் கொண்டுள்ள இந்தச் சரணாலயம், புலிகள் வசிப்பதற்கு ஏற்ற நிலைமைகளைக் கொண்டுள்ளதால், இது சுற்றுச்சூழல் அமைப்பின் மீள்வினை காட்டுகிறது.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## நீர் வளம் சார்ந்த மதிப்பீட்டு அறிக்கை


- நிதி ஆயோக் அமைப்பானது, உயர் இலட்சியமிக்கத் தொகுதிகளில் நீர் வளம் சார்ந்த மதிப்பீட்டு அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- மனிதர்கள், கால்நடைகள், வேளாண்மை மற்றும் தொழில்துறைக்கான நீர் தேவையை மதிப்பிடுவதற்கு நீர் வளம் சார்ந்த மதிப்பீட்டு அறிக்கை ஒரு கட்டமைக்கப்பட்ட அணுகுமுறையை வழங்குகிறது.
- இந்த மதிப்பீடு ஆனது 11 மாநிலங்கள் மற்றும் 8 வேளாண்-பருவநிலை மண்டலங்களில் உள்ள 18 இலட்சியமிக்க தொகுதிகளில் மேற்கொள்ளப்பட்டது.
- இணைய அடிப்படையிலான தளமான வருணி, தொகுதி அளவிலான நீர்ப் பாதுகாப்பு திட்டமிடல் மற்றும் ஒருங்கிணைந்த நீர் மேலாண்மையை ஆதரிக்கிறது.
- குடிநீர் நிலைத்தன்மையை மேம்படுத்துவதற்கும் அதன் சமமான விநியோகத்தை உறுதி செய்வதற்கும் தனிப் பயனாக்கப்பட்டப் பரிந்துரைகளை இந்த அறிக்கை வழங்குகிறது.




## உலக நகரமயமாக்கலுக்கான வாய்ப்புகள் குறித்த அறிக்கை 2025

- 2025 ஆம் ஆண்டு உலக நகரமயமாக்கல் வாய்ப்புகள் அறிக்கையை ஐக்கிய நாடுகளின் பொருளாதார மற்றும் சமூக விவகாரத் துறை (UN DESA) வெளியிட்டது.
- உலகின் 8.2 பில்லியன் மக்களில் 45% பேர் தற்போது நகரங்களில் வசிப்பதாக இந்த அறிக்கை கூறுகிறது.

- 2025 மற்றும் 2050 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் உலக மக்கள்தொகை வளர்ச்சியில் மூன்றில் இரண்டு பங்கு நகரங்களில் ஏற்படும் என்று அறிக்கை கூறுகிறது.
- 2025 மற்றும் 2050 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் உலகளாவிய நகர மக்கள்தொகை வளர்ச்சியை அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படும் ஏழு நாடுகளில் இந்தியாவும் ஒன்றாகும்.
- இந்தியா, நைஜீரியா, பாகிஸ்தான், காங்கோ ஜனநாயக குடியரசு, எகிப்து, வங்காள தேசம் மற்றும் எத்தியோப்பியா ஆகிய நாடுகளில் 500 மில்லியனுக்கும் அதிகமான புதிய நகர்ப்புற குடியிருப்பாளர்கள் இருப்பர்.
- இந்தியாவிலும் சீனாவிலும் சேர்ந்து கூட்டாக சுமார் 1.2 பில்லியன் நகரவாசிகள் உள்ளனர்.
- 1975 ஆம் ஆண்டில் 8 ஆக இருந்த 10 மில்லியனுக்கும் அதிகமான மக்கள்தொகை கொண்ட பெருநகரங்களின் எண்ணிக்கை 2025 ஆம் ஆண்டில் 33 ஆக அதிகரித்து உள்ளன.
- ஜகார்த்தா (42 மில்லியன்), டாக்கா (40 மில்லியன்) மற்றும் டோக்கியோ (33 மில்லியன்) ஆகியவற்றில் மிக அதிக எண்ணிக்கை பதிவாகியுள்ளது என்பதோடு மேலும் இது 2050 ஆம் ஆண்டில் 37 ஆக உயரக்கூடும்.
- உலகின் அதிக மக்கள் தொகை கொண்ட முதல் 10 நகரங்களில் பெங்களூருவும் ஒன்றாகப் பட்டியலிடப் பட்டுள்ளது.
- இது ஒரு சதுர கி.மீட்டருக்கு 20,000 மக்களைத் தாண்டிய மக்கள்தொகை அடர்த்தியைக் கொண்டுள்ளது.
- டெல்லி, மும்பை, கொல்கத்தா மற்றும் சென்னையுடன் சேர்த்து, பெங்களூரு இந்தியாவின் ஐந்து பெரு நகரங்களில் ஒன்றாக உள்ளது.
- உலகின் அதிக மக்கள்தொகை கொண்ட 50 நகரங்களில், 12 இந்தியாவில் உள்ளன.
- 1975 மற்றும் 2025 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் உலகளவில் மொத்த நகரங்களின் எண்ணிக்கை இரட்டிப்பாகியுள்ளது மற்றும் 2050 ஆம் ஆண்டில் இந்த எண்ணிக்கை 15,000 என்பதைத் தாண்டக் கூடும்.
- தேசிய மக்கள் தொகை அதிகரிக்கும் வேளையில் கூட பல நகரங்கள் குறுகி வருகின்றன என்பதோடு குறிப்பாக சீனா மற்றும் இந்தியாவில், குறுகி வரும் நகரங்களில் மூன்றில் ஒரு பங்கு 250,000க்கும் குறைவான மக்களைக் கொண்டுள்ளது.
- எதிர்கால மேம்பாடு மற்றும் பருவநிலை இலக்குகளுக்கு நிலையான நகர்ப்புறத் திட்டமிடல் அவசியம் என்பதை இந்த அறிக்கை எடுத்துக்காட்டுகிறது.




# முக்கிய தினங்கள்

## உலக AMR விழிப்புணர்வு வாரம் (WAAW) 2025 - நவம்பர் 18/24

- உலக நுண்ணுயிர்க் கொல்லி எதிர்ப்புத் திறன் (AMR) பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதும் அது குறித்த புரிதலை அதிகரிப்பதும் இதன் நோக்கமாகும்.
- இது முதலில் உலக சுகாதார சபையால் அதிகாரப்பூர்வமாக உலகளாவிய சுகாதாரப் பிரச்சாரமாக அங்கீகரிக்கப்பட்டது.
- பாக்டீரியா, வைரஸ்கள், பூஞ்சைகள் மற்றும் ஒட்டுண்ணிகள் நுண்ணுயிர்க் கொல்லி காரணிகளுக்கு எதிர்வினை ஆற்றாத சூழலில் AMR ஏற்படுகிறது.
- AMR திறனால் ஏற்படும் தொற்றுகளுக்குச் சிகிச்சையளிப்பது மிகவும் கடினம் அல்லது சாத்தியமற்றது என்பதோடு இது கடுமையான நோய் மற்றும் உயிரிழப்பு அபாயத்தை அதிகரிக்கிறது.
- 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Act Now: Protect Our Present, Secure Our Future" என்பதாகும்.




## குழந்தை பாலியல் சுரண்டல், துஷ்பிரயோகம் மற்றும் வன்முறையைத் தடுத்தல் தணிப்பதற்குமான உலக தினம் 2025 – நவம்பர் 18




- குழந்தை பாலியல் சுரண்டல், துஷ்பிரயோகம் மற்றும் வன்முறையைத் தடுப்பதும், பாதிக்கப் பட்டவர்களை குணப்படுத்துவதை ஆதரிப்பதும் இதன் நோக்கமாகும்.

- இது முதன்முதலில் 2022 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபையால் அறிவிக்கப்பட்டது.
- உலகளவில், 20 வயதுக்குட்பட்ட சுமார் 120 மில்லியன் பெண்கள் கட்டாயப் பாலியல் உறவை எதிர் கொண்டுள்ளனர் என்பதோடு இதனால் சிறுவர்களும் பாதிக்கப் பட்டு உள்ளனர் என்ற நிலையில் சில நாடுகளில் 3% முதல் 17% வரை இந்தப் பாதிப்பு பரவல் உள்ளது.
- 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Strengthening the protection of children against sexual exploitation and sexual abuse through evidence-based policy making" என்பதாகும்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★